# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 16-12-2019 திங்கள் கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

பொருள் எண். 1

நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் (MA IV) துறை அரசாணை எண்.150, நாள் 19-11-2019-ம் தேதியில் 01-04-2018 முதல் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் சொத்துவரி சீராய்வின்படி உயர்த்தப்பட்ட சொத்துவரியினை நிறுத்தி வைத்தும் சொத்துவரி சீராய்வு தொடர்பாக.

1) அரசு முதன்மை செயலாளர், நிதி (செலவினம்) துறை/ தலைவர்)
2) நகராட்சி நிர்வாக ஆணையர்/ உறுப்பினர், கன்வீனர்
3) பேரூராட்சிகள் இயக்குநர் / உறுப்பினர்
4) ஆணையர் சென்னை மாநகராட்சி/ உறுப்பினர்

ஆகியோரை கொண்ட குழு சொத்துவரி சீராய்வு தொடர்பாக ஆய்வு செய்து அதன் முடிவினை அரசுக்கு அளித்து அதன் மீது அரசு முடிவெடுத்து அறிவிக்கும் வரை உயர்த்தப்பட்ட சொத்துவரி நிறுத்தி வைக்கப்படுகிறது என அரசாணை எண்.(MS)No.150, நாள் 19-11-2019 வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அ.கு.:- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
ந.க.எண்.2035/2018/அ2,

**நகர்மன்ற தீர்மான எண் . 3403**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்கு தேவையான எழுது பொருள்கள் தக்கலை கூட்டுறவு அச்சகத்திலிருந்து வாங்கிய வகையில் பட்டியல் தொகை ரூ.62,128/- வழங்கிட பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் . 3404**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ், கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 12-11-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.20 நந்தன்காடு ஆண்டி நாடார் பாத்திர கடை சமீபம் வார்டு 21 தட்டாக்குடி சமீபம் குடிநீர் குழாய்கள் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 1.50 | 1) திரு.பி ஜெயச்சந்திரன் மதிப்பீட்டை விட 0.03% குறைவு<br>2) திரு.பி. ஜெயப்பிரகாஷ் மதிப்பீட்டை விட 1.45% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.பி. ஜெயச்சந்திரன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3405**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN.74W 0236-ன் கியர் பழுதடைந்து வாகனம் இயக்க முடியாத நிலையிலுள்ளது. எனவே பழுதடைந்த கியர் சரி செய்ய உள்ளூர் விலைப்புள்ளிகள் இரண்டு பெறப்பட்டுள்ளது.

1) கணேஷ் மோட்டார்ஸ்,
   நாகர்கோவில் - ரூ. 5605/-

2) அக்சயா மோட்டார்ஸ்,
   நாகர்கோவில் - ரூ. 6354/-

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் கணேஷ் மோட்டார்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்கவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3406**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் உரக்கிடங்கு செல்லும் சாலை மிகவும் சேதமடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால் பொதுமக்கள் நடந்து செல்வதற்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி சாலையில் சிமெண்டு காங்கிரீட் தளம் அமைத்து வடிகால் ஒடையும் சரி செய்வதற்கு ரூ.9,90,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் இதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3407**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சி தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள நீரேற்றிகள் சுலீஸ் வால்வு மற்றும் Non return value-கள் பொருத்தப்பட்டு 10 வருடங்களுக்கு மேலாலகியுள்ளதால் வால்வுகள் அடிக்கடி பழுதடைவதுடன் குடிநீர் வீணாகிறது. ஆகவே பழைய வால்வுகளை மாற்றி புதிய வால்வுகள் வாங்கிட ரூ.3,30,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வால்வுகள் வாங்குவதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3408**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட நரியன்விளை மெயின் ரோட்டில் End to End சாலை அமைக்கப்பட்டு இருபுறமும் வடிகால் ஒடை அமைக்கப்பட்டு இருபுறமும் வடிகால் திறந்து நிலையில் உள்ளது. அப்பகுதியில் பேருந்து நிறுத்தம் உள்ளது. பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் இறங்கும் போது எதிர்பாராத விதமாக வடிகால் ஒடையில் விழுவதற்கு வாய்ப்புள்ளது. எனவே இருபுறமும் சிறிது துரம் வடிகால் ஒடையின் மேல் மூடுசிலாப் அமைக்கவும் நரியன்விளை சாலையில் வள்ளிகோடு குளம் முதல் அருகில் சேதமடைந்துள்ள சாலையை சரி செய்வதற்கும் மதிப்பீடு ரூ.5,00,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாலையை சரி செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3409**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கொல்லன்விளை, சீரான்விளை சாலைகள் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே மேற்கெண்ட சாலைகளை சீரமைத்திட சிமெண்டு காங்கிரீட் தளம் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.8,60,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3410**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தெருவிளக்கு கம்பங்களிலுள்ள மின்விளக்குகளை பராமரிப்பு செய்வதற்கு மின்சாதன உதிரிப்பொருட்கள் வாங்குவதற்கு ரூ.9,90,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மின்சாதனப் பொருட்கள் வாங்குவதற்கும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3411**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட விளவங்கோடு அரசு மேல்நிலைப்பள்ளி செல்லும் சாலை மிகவும் சேதமடைந்து பள்ளி செல்லும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நடந்து செல்வதற்கு இடையூறாக உள்ளது. எனவே மேற்படி சாலையில் சிமெண்டு காங்கிரீட் தளம் அமைப்பதற்கு ரூ.9,20,000/-ற்கு மதிப்பீடு

தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை செய்வதற்கும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3412**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் வெட்டுவெந்நி படிப்பகம், குழித்துறை படிப்பகம் ஆகிய படிப்பகங்களில் கடந்த மூன்று வருடகாலமாக பழைய செய்தி தாள்களை பொதுஏலம் விடாத காரணத்தினால் செய்தி தாள்கள் தற்போது தேங்கியுள்ளது. அதை பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் . 3413**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 12</u>

தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு (TURIP) திட்டம் 2019-2020-ன் கீழ் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கான 7-11-2019-ம் நாளைய ஒப்ந்தப்புள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.67358/-ற்கான பட்டியல் வழங்க Accord Advertising Agency பட்டியல் வரப்பெற்றுள்ளது. (Bill No.AAA/0382/19-20, dated 26-10-2019) மேற்படி பட்டியல் தொகை ரூ.67358/- Accord Advertising Agency-க்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3414**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 13

மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் அமைந்துள் உயர்கோபுர மின்விளக்கு எரியாமலுள்ளதால் அதனை Crane மூலம் கீழே இறக்கவும், குருவி மற்றும் எலிகள் புகாதவாறு வலை அமைக்கும் பணி ரூ.60,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் 4-12-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/S. Nirish Electricals, Nagercoil | 3.33% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S. Afhrah Electricals, Nagercoil | மதிப்பீட்டு விகிதம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் மதிப்பீட்டை விட 3.33% குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S. Nirish Electricals நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3415**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 14

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு வாகனம் TN75M 4923 வாகனத்தின் டயர்கள் நான்கு எண்ணம் பழுதடைந்துள்ளதால் புதிய டயர்கள் நான்கு எண்ணம் வாங்குவதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | Tyre Zone Pammam, Marthandam | 11200/- |
| 2 | Anand Tyres, Main Road, Marthandam | 11400/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 Tyre Zone நிறுவன விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3416**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 15

குழித்துறை நகராட்சியில் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள பழைய பொருட்களுக்கான ஏலம் 9-12-2019 அன்று நடைபெற்றது. இதில் 17 நபர்கள் கலந்து கொண்டனர். ஏலம் எவரும் கோரவில்லை. இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எ. அனில்குமார், பெருந்தெரு, குழித்துறை | 377650/- |
| 2 | திரு. அலெக்ஸ், கொல்லம், கேரளா | 480000/- |

வரப்பெற்ற டெண்டர்களில் வரிசை எண்.2 திரு. அலெக்ஸ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள தொகை ரூ.4,80,000/- அரசாங்க மதிப்பை விட ரூ.90,000/- கூடுதலாக உள்ளதால் மன்றம் பரிசீலனை செய்து அனுமதிக்கலாம்.

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3417**
**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு பணிகள் செய்திட பொருத்தப்பட்டுள்ள Liquid Chlorinator-க்கு தேவையான Bleaching Liquid வாங்கி பயன்படுத்தி சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், ஒரு மாதத்திற்கு சராசரி 2500 லிட்டர்கள் தேவைப்படுவதால் ஒரு வருடத்திற்கு 30000 லிட்டர்கள் தேவைப்படுகிறது. எனவே ஒராண்டிற்கு Bleaching Liquid வாங்குவதற்கு ரூ.6,00,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி Bleaching Liquid வாங்குவதற்கும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தி அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3418**

**அனுமதிக்கப்படுகிறது**

## குழித்துறை நகர்மன்றத்தின் 31-12-2019 செவ்வாய் கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மண்டலம் வாரியாக மனித சக்தியினை பயன்படுத்தி துப்புரவு பணி மேற்கொள்ளுதலில் 22-11-2018-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S. Southern Solid Waste Mangement என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தீர்மான எண்.3223, நாள் 28-12-018-ல் ஏற்றுக்கொண்டதனடிப்படையில் 31-1-2019 முதல் ஒராண்டு காலம் வேலை செய்ய உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படி 31-12-2019 உடன் ஒராண்டு காலம் முடிவு பெறுவதால் மீண்டும் ஒராண்டு காலம் நீடிப்பு செய்துதர கேட்டு 9-12-2019-ல் M/S. Southern Solid Waste Mangement உரிமதாரர் விண்ணப்பம் செய்துள்ளார்.

மேற்படி விண்ணப்பத்தினை பரிசீலனை செய்யப்பட்டதில் இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர் அறிக்கையின்படி மீண்டும் ஒராண்டு காலம் M/S. Southern Solid Waste Mangement Service என்ற நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்து வழங்கிட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே 2019-2020 1-1-2020 முதல் 31-12-2020 வரை மீண்டும் ஒராண்டு உரிமகாலம் நீடிப்பு செய்து வழங்க மன்றம் அனுமதிக்காக.

அ.கு.- மேற்படி பணிகள் அவசர அவசியமாக செய்யப்பட வேண்டியுள்ளதால் மீண்டும் உரிமகாலம் நீடிப்பு செய்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2687/2017/அ2.

**நகர்மன்ற தீர்மான எண் . 3419**
**அனுமதிக்கலாம்**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான Scorpio வாகனம் TN75AL-6196-க்கு Oil change மற்றும் full service செய்யப்பட்டுள்ளது. மேற்படி Oil மாற்றம் செய்யப்பட்ட வகைக்கு Derik Mahindra, Tirunelveli நிறுவனத்திற்கு ரூ.3554/-ற்கான பட்டியல் தொகை வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3420**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய பழைய கடை எண்.8-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.என். தேவராஜ் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைத்தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.என். தேவராஜ் | 2007-2008 | பழைய கடை எண்.8 | 29650<br>407 | 294 Vol.II<br>302 Vol.II |

**நகர்மன்ற தீர்மான எண் . 3421**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் வடக்கு தெருவில் தலைமை நீரேற்று நிலையம் உள்ளது. நீரேற்று நியைத்திலிருந்து குடிநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு கழுவன் திட்டை, பந்நியணி, மார்க்கெட் ஆகிய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குழாய்கள் மூலம் பம்பிங் செய்ப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. State Highway சாலையில் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. மேற்படி குழாய்கள் பலவருடங்களுக்கு முன்பாக பதிக்கப்பட்ட AC பைப்புகளாகும். எனவே அடிக்கடி குடிநீர் குழாய் பழுதடைந்து வருகிறது. குடிநீர் குழாய் பழுது சரி செய்யும் பணி மேற்கொள்ளும்போது சாலை பழுதடைகிறது. நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையினை தோண்டி குடிநீர் பழுது சரி செய்யப்பட்டமையால் சேதப்படுத்திய சாலையினை சிமெண்டு காங்கிரீட் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ள ரூ.1,00,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3422**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பறை மற்றும் வெட்டுவெந்நி காய்கறி மற்றும் மீன்சந்தை ஆகிய இனங்களுக்கு 2019-2020 உடன் குத்தகை காலம் முடிவடைவதால் மீண்டும் 2020-2021 முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் வழங்க பொது ஏலம்/ பொது ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் அதற்கான செலவினத்தை பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்ற அனுமதிக்கு.
ந.க.எண்.2036/2018/அ2.

**நகர்மன்ற தீர்மான எண் . 3423**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் உரக்கிடங்கில் Biomining வேலை நடைபெறுவதால் நகரில் தினசரி சேகரமாகும் குப்பைகளை கொட்ட போதிய இடவசதி இல்லாததால் சுகாதார ஆய்வாளரின் 18-11-2019-ம் தேதிய அறிக்கையில் குவிந்துள்ள குப்பைகளை Hitachi இயந்திரம் மூலம் ஒரு ஒரத்தில் ஒதுக்கிடவும் கேட்டுள்ளதனடிப்படையில் மேற்படி வேலை செய்திட உத்தேச செலவினம் ரூ.2,00,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்ற தீர்மான எண் . 3424**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 7

நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் மார்க்கெட்ரோடு மற்றும் குலசேகரம் ரோடு ஆக்கிரமிப்புகள் அனைத்தும் காவல்துறை பாதுகாப்பு மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஒத்துழைப்புடன் 01-10-2019 அன்று அப்புறப்படுத்தப்பட்டது. அப்போது J.C.B இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. அவசர அவசியம் கருதி மேற்படி பணிகள் முடிக்க வேண்டியிருந்தமையால் 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1) திரு. ஜஸ்டின்குமார் - ரூ.1000/-
2) திரு. ராஜேஷ்குமார் - ரூ.1050/-
3) திரு. சாமுவேல் ஜோஸ்ராஜ் - ரூ.1100/-

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கவும், குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணி செய்தமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3425**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சியில் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள பழைய பொருட்களுக்கான ஏல அறிவிப்பு தமிழ்சுடர் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.12600/- ESS ESS Publication-க்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. (பட்டியல் எண்.A/ADVT/Nov.2019/156) மேற்படி பட்டியல் தொகை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3426**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனம் TN75M 4923-ன் Battery பழுது ஏற்பட்டு வாகனம் இயக்க முடியாத நிலையிலுள்ளதால் புதிய பேட்டரி வாங்குவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1) தேவி பேட்டரி
   வெட்டுவெந்நி, மார்த்தாண்டம் ரூ.4600/-

2) மாணிக்கம் பேட்டரி,
   பம்மம், மார்த்தாண்டம் ரூ.4400/-

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் மாணிக்கம் பேட்டரி ஒர்க்ஸ் நிறுவன விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3427**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட ஆலஞ்சோலை சாலை முதல் இடைத்தெரு சாலை வரை கூடுதலாக பேவர் பிளாக் அமைக்கும் பணி ஒப்பந்ததாரர் திரு.P. தேவராஜன் என்பவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கான பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள END ரூ.2300/- (ம) FSD ரூ.2300/- ஆகியவற்றை திரு.P. தேவராஜன் ஒப்பந்ததாரருக்கு திருப்பி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3428**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 இல் வெட்டுமணி பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆணையாளர் குடியிருப்பு ஒன்று கட்டுமறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் 30-12-2019 அன்று ஆய்வு செய்த போது அறிவுறுத்தினார்கள். இந்நகராட்சியில் ஆணையர் குடியிருப்பு எதுவும் இல்லாத காரணத்தினால் மேற்கூறிய இடத்தில் ஆணையர் குடியிருப்பு கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3429**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் சந்தைப்பகுதியில் புதியதாக நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் கூடம் ஒன்று கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இக்கட்டிடத்தின் செயல்பாட்டினை ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு பசுமை தீர்ப்பாயம் தலைவர் நீதிபதி ஜோதிமணி அவர்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் ஆகியோருடன் 30-12-2019 அன்று ஆய்வு மேற்கொண்டார்கள். அச்சமயம் அக்கூடத்தில் கூடுதலாக மின்விளக்கு பொருத்தவும், காற்றோட்ட வசதிக்காக Mechanical exhaust fan பொருத்தவும், முன்பகுதியில் குப்பைகளைப் பிரித்தெடுக்கும் பகுதியில் கூரை போட்டு கொடுக்குமாறு அறிவுறுத்தினார்கள். மேலும் முன்பகுதியில் உள்ள பழுதடைந்த சுற்றுசுவர், சிறுபாலம் ஆகியவற்றையும் சீரமைக்க

வேண்டியுள்ளது. எனவே கூடுதலாக மின்விளக்குகள் Mechanical exhaust fan சுற்றுசுவர் மற்றும் சிறுபாலம் சீரமைப்பு ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பீடு தொகை ரூ.9.90 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3430**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 13

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11-ல் அமைந்துள்ள கூத்தமன்விளை பகுதியில் உள்ள சுமார் 20 குடியிருப்புகளின் கழிவுநீர் செல்ல போதிய கழிவுநீர் கால்வாய் வசதி இல்லாத காரணத்தினால் குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் இரயில்வே துறைக்கு சொந்தமான இடத்தில் வெளியேற்றப்படுகிறது. இதனால் அதன் கீழ்ப்பகுதியில் உள்ள இரும்பு பாதையின் மீது நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு மனு கொடுத்துள்ளனர். அப்பகுதி மிகவும் மேடான பகுதியாக இருப்பதாலும், சாலையின் அகலம் குறுகியதாக இருப்பதாலும் மக்களின் நலன் கருதி கழிவுநீரை குழாயின் மூலம் அருகிலுள்ள கழிவுநீர் கால்வாயில் இணைக்கும் பொருட்டு ரூ.95,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் . 3431**
**அனுமதிக்கப்படுகிறது**

ஒப்பம்./- திரு.எஸ். மூர்த்தி
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/.உண்மை நகல்/

ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.